**பரமக்குடி நகராட்சி அலுவலகம்,**
**நாள். 10.02.2021**

**<u>நிகழும் திருவள்ளுவராண்டு பிப்ரவரி மாதம் 11 ம் நாள் ( 11.02.2021) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள்கள்</u>**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் M.S.Man Power Agency Paramakudi என்ற நிறுவனம் 16 பணியாளர்களை கொண்டு 01.03.2019 முதல் இன்று வரை துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு உத்தரவு காலம் 28.02.2021ம் தேதியுடன் முடிவடைவதாகவும், மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குமாறு மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பத்திற்கு ஆணையர் அனுமதியுடன் நகராட்சி சுகாதார அலுவலர் கீழ்க்கண்டவாறு குறிப்பு அளித்துள்ளார்.<br><br>மேற்கண்ட நிறுவனம் இது வரை எவ்வித புகாருக்கும் இடமின்றி சிறப்பான முறையில் பள்ளிகளில் துப்புரவு பணிகள் மேற்கொண்டு வருவதாலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் பள்ளிகளில் தூய்மைப்பணிகள் வருடம் முழுவதும் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாலும், மேலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சிறப்பாக பணிபுரியும் பட்சத்தில் மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.<br><br>எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி தற்போது பள்ளிகளில் தூய்மை பணிகள் மேற்கொண்டு வரும் M.S.Man Power Agency Paramakudi என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கி வரும் அதே ஊதிய விகிதத்தில் 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு பள்ளிகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. M.S.Man Power Agency Paramakudi என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கி வரும் அதே ஊதிய விகிதத்தில் 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு பள்ளிகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.செலவினத்தை கல்வி நிதி மற்றும் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1347, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.2 | 209– பரமக்குடி சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட நகராட்சி பகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களை செம்மைப்படுத்தும் மற்றும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம் போன்ற பணிகளை மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின்படி சட்ட மன்ற தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தல் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.<br>மேற்படி தேர்தல் பணியை கணினியில் அவ்வப்போது வரப்படும் படிவங்கள் 6,7,8 மற்றும் 8A இவையினை பதிவேற்றம் செய்வது மற்றும் படிவங்களை தயார் செய்து பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கு (Computer Programmer) கணினி அமைப்பாளர் வைத்து மேற்கொள்ள இருப்பதால் தேர்தல் பணியின் அவசர அவசியம் கருத்தில் கொண்டு தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் கமிட்டியில் ஒப்புதல் வழங்கப்பட்ட சம்பள விலை விகிதத்தின்படி 88 வேலை நாட்களுக்கு மட்டும் ஒரு வரை நியமித்து கொள்ளவும், மேற்படி தேர்தல் பணிகளுக்கு இதனால் ஏற்படும் செலவின உத்தேச தொகை ரூ.34230/—ஐ பொது நிதியிலிருந்து வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.1968/2018/சி3 (தே)<br>**தீர்மானம் எண்.1348, அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 25 வார்டு பகுதிகளில் Exernet, Madurai என்ற நிறுவனம் 185 துப்புரவுப்பணியாளர்களைக் கொண்டு 01.03.2019 முதல் இன்று வரை துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு காலம் 28.02.2021ந் தேதியுடன் முடிவடைவதாகவும், மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குமாறு மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பத்திற்கு ஆணையர் அவர்களின் அனுமதியின்படி நகராட்சி சுகாதார அலுவலர் கீழ்க்கண்டவாறு குறிப்பு அளித்துள்ளார்.<br><br>திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சியில் 100% அளவு குப்பைகள் சேகரம் செய்து தரம் பிரித்து உரமாக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும், இதில் மேற்கண்ட நிறுவனத்தின் 185 பணியாளர்கள் மூலம் 75% அளவு குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு தரம் பிரிக்கப்பட்டு உரம் தயாரிக்கப்படுவதாகவும், மேற்கண்ட நிறுவனம் இதுவரை எவ்வித புகாருக்கும் இடமின்றி சிறப்பான முறையில் துப்புரவு பணிகள் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.<br><br>மேலும், மேற்கண்ட நிறுவனத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஷரத்துகளில் சிறப்பாக பணிபுரியும் பட்சத்தில் மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து கொள்ளலாம் என்ற நிபந்தனையின்படி பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மை பணிகளின் முக்கியத்துவம் கருதியும் தற்போது துப்புரவு பணி மேற்கொண்டு வரும் Exsernet Madurai என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கிவரும் அதே ஊதிய விகிதத்தில் மேலும் ஒரு வருட காலத்திற்கு துப்புரவு பணி மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கலாம் என தெரிவித்துள்ளார். அதன்படி Exsernet Madurai என்ற நிறுவனத்திற்கு 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Exsernet Madurai என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கிவரும் அதே ஊதிய விகிதத்தில் 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு துப்புரவுப்பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1349, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளில் Exernet, Madurai என்ற நிறுவனம் 100 டெங்கு மஸ்தூர் பணியாளர்களைக் கொண்டு 01.03.2019 முதல் இன்று வரை டெங்கு தடுப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு காலம் 28.02.2021ந் தேதியுடன் முடிவடைவதாகவும், மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குமாறு மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பத்திற்கு ஆணையர் அவர்களின் அனுமதியின்படி நகராட்சி சுகாதார அலுவலர் கீழ்க்கண்டவாறு குறிப்பு அளித்துள்ளார்.<br><br>மேற்கண்ட நிறுவனம் இதுவரை எவ்வித புகாரும் இடமின்றி சிறப்பான முறையில் டெங்கு தடுப்புப்பணிகள் மேற்கொண்டு வருவதாலும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தில் DBC பணியாளர்களைக் கொண்டு 300 HH முறைப்படி வருடம் முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், மேலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சிறப்பாக பணிபுரியும் பட்சத்தில் மேலும் ஒருவருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.<br><br>எனவே, பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் தற்போது டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொண்டும் வரும் Exsernet,Madurai என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கிவரும் அதே ஊதிய விகிதத்தில் 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |

| | |
|---|---|
| | <u>**அலுவலகக் குறிப்பு**</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Exsernet Madurai என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கிவரும் அதே ஊதிய விகிதத்தில் 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1350, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.5 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட உழவர்சந்தை நுண்ம உரக்கூட மையத்தில் Ever Green Environment Services, Ramnad என்ற நிறுவனத்தின் 5– துப்புரவு பணியாளர்களை கொண்டு 01.03.2020 முதல் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு காலம் 28.02.2021ந் தேதியுடன் முடிவடைவதால் மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குமாறு மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பத்திற்கு ஆணையர் அனுமதியுடன் சுகாதார அலுவலர் கீழ்க்கண்டவாறு குறிப்பு அளித்துள்ளார்.<br><br>மேற்கண்ட நிறுவனம் இதுவரை எவ்வித புகாரும் இடமின்றி சிறப்பான முறையில் நுண்ம உரக்கூடமையத்தில் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொண்டு வருவதாலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் உரம் தயாரிக்கும் பணிகள் வருடம் முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், மேலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சிறப்பாக பணிபுரியும் பட்சத்தில் மேலும் ஒருவருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.<br><br>எனவே, பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் கருதியும் தற்போது உழவர்சந்தை நுண்ம உரக்கூடமையத்தில் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொண்டும் வரும் Ever Green Environment Services, Ramnad என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கிவரும் அதே ஊதிய விகிதத்தில் 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு நுண்ம உரக்கூட மையத்தில் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.<br><u>**அலுவலகக் குறிப்பு**</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Ever Green Environment Services, Ramnad என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கிவரும் அதே ஊதிய விகிதத்தில் 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு நுண்ம உரக்கூட மையத்தில் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1351, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.6 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தை நுண்ம உரக்கூட மையத்தில் Ever Green Environment Services, Ramnad என்ற நிறுவனத்தின் 5– துப்புரவு பணியாளர்களை கொண்டு 01.03.2020 முதல் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு காலம் 28.02.2021ந் தேதியுடன் முடிவடைவதால் மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குமாறு மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பத்திற்கு ஆணையர் அனுமதியுடன் சுகாதார அலுவலர் கீழ்க்கண்டவாறு குறிப்பு அளித்துள்ளார்.<br><br>மேற்கண்ட நிறுவனம் இதுவரை எவ்வித புகாரும் இடமின்றி சிறப்பான முறையில் நுண்ம உரக்கூடமையத்தில் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொண்டு வருவதாலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் உரம் தயாரிக்கும் பணிகள் வருடம் முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், மேலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சிறப்பாக பணிபுரியும் பட்சத்தில் மேலும் ஒருவருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். |

| | |
|---|---|
| | எனவே, பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் கருதியும் தற்போது உழவர்சந்தை நுண்ம உரக்கூடமையத்தில் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொண்டும் வரும் Ever Green Environment Services, Ramnad என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கிவரும் அதே ஊதிய விகிதத்தில் 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு நுண்ம உரக்கூட மையத்தில் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Ever Green Environment Services, Ramnad என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கிவரும் அதே ஊதிய விகிதத்தில் 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு நுண்ம உரக்கூட மையத்தில் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1352, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.7 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட ஜீவா நகர் நுண்ம உரக்கூட மையத்தில் Ever Green Environment Services, Ramnad என்ற நிறுவனத்தின் 5– துப்புரவு பணியாளர்களை கொண்டு 01.03.2020 முதல் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு காலம் 28.02.2021ந் தேதியுடன் முடிவடைவதால் மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குமாறு மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பத்திற்கு ஆணையர் அனுமதியுடன் சுகாதார அலுவலர் கீழ்க்கண்டவாறு குறிப்பு அளித்துள்ளார்.<br><br>மேற்கண்ட நிறுவனம் இதுவரை எவ்வித புகாரும் இடமின்றி சிறப்பான முறையில் நுண்ம உரக்கூடமையத்தில் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொண்டு வருவதாலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் உரம் தயாரிக்கும் பணிகள் வருடம் முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், மேலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சிறப்பாக பணிபுரியும் பட்சத்தில் மேலும் ஒருவருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.<br><br>எனவே, பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் கருதியும் தற்போது ஜீவா நகர் நுண்ம உரக்கூடமையத்தில் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொண்டும் வரும் Ever Green Environment Services, Ramnad என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கிவரும் அதே ஊதிய விகிதத்தில் 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு நுண்ம உரக்கூட மையத்தில் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Ever Green Environment Services, Ramnad என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கிவரும் அதே ஊதிய விகிதத்தில் 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு நுண்ம உரக்கூட மையத்தில் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1353, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.8 | பரமக்குடி நகராட்சியில் கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ள தேவைப்படும் 1% Sodium Hypo Chloride என்ற கிருமி நாசினியினை The Madurai District Cooparative Agro Society Ltd Madurai என்ற நிறுவனம் மூலம் 15.07.2020 அன்று 205000 மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டதற்கும், கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ள தேவைப்படும் பாதுகாப்பு |

உபகரணங்களை Ever Green Environment Service Ramanathapuram என்ற நிறுவனம் மூலம் 29.07.2020 அன்று 207500 மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டதற்கும், கொரோனா தடுப்பு பணிகளை தீவிரமாக மேற்கொள்ள தேவைப்படும் 1% Sodium Hypo Chloride என்ற கிருமி நாசினியினை The Madurai District Cooparative Agro Society Ltd Madurai என்ற நிறுவனம் மூலம் 13.08.2020 அன்று 205000 மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டதற்கும், கொரோன தடுப்பு பணிகளை தீவிரமாக மேற்கொள்ள தேவைப்படும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் என்ற கிருமி நாசினியினை Ever Green Environment Service Ramanathapuram என்ற நிறுவனம் மூலம் 20.08.2020 அன்று 450000 மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டதற்கும், கொரோனா தடுப்பு பணிகளை தீவிரமாக மேற்கொள்ள தேவைப்படும் பிளிச்சிங் பவுடர், லைசால் போன்ற கிருமிநாசினிகளை Ever Green Environment Service Ramanathapuram என்ற நிறுவனம் மூலம் 26.08.2020 அன்று ரூ.772000 மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டதற்கும், கொரோனா தடுப்பு பணிகளை தீவிரமாக மேற்கொள்ள தேவைப்படும் தெர்மல் ஸ்கேனர்களை Ever Green Environment Service Ramanathapuram என்ற நிறுவனம் மூலம் 23.09.2020 அன்று 112000 மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டதற்கும், மன்றத்தின் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. கொரோனா நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதி மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண்.1354, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.9

நகர்மன்ற தீர்மான எண். நாள் 31.12.2020ன்படி இந் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான கிருமி நாசினிகள் கொள்முதல் செய்ய சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 02.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | வினியோகம் செய்ய வேண்டிய கிருமி நாசினிகள் விபரம் | Ever Green Environment Services, Ramnad என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி | Arun Marketing Paramakudi என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1. | சுண்ணாம்புத்தூள் 25000 கிலோ | ரூ.225000/– | ரூ.237500/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு கிருமி நாசினிகள் வினியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Ever Green Environment Services, Ramnad என்ற நிறுவனத்திற்கு தனிஅலுவலர் அவர்களின் 02.02.2021ம் தேதிய முன் அனுமதியின்படி பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கு நகர் மன்றத்தின் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. குறைந்த தொகைக்கு கிருமி நாசினிகள் வினியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Ever Green Environment Services, Ramnad என்ற நிறுவனத்திற்கு தனிஅலுவலர் அவர்களின் 02.02.2021ம் தேதிய முன் அனுமதியின்படி பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.1355, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.10

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 19.01.2021ந் தேதி முதல் 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்கள் பள்ளிகள் திறக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் அறிவுரைகளில் பள்ளிகள் நீண்ட காலமாக பூட்டிய நிலையில் உள்ளதால் பள்ளிகளில் உள்ள மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகளை பிளீச்சிங் பவுடர் மூலம் சுத்தம் செய்தல், பள்ளி வகுப்பறைகள், டேபிள் சேர்கள், பள்ளி வளாகங்கள் தினசரி இரண்டு முறை சோடியம் ஹைபோகுளோரைடு, லைசால் போன்ற கிருமி நாசினி தெளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், முதன்மை கல்வி அலுவலர், இராமநாதபுரம் அவர்களிடமிருந்து பரமக்குடிந கர் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கோவிட் 19 முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கையாக கிருமி நாசினி தெளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் பொருட்டு பள்ளிகளில் கிருமி நாசினி தெளிக்க தேவைப்படும் சோடியம் குளோரைடு, லைசால் மற்றும் பிளிச்சிங் பவுடர் போன்றவை அலுவலக இருப்பில் மிக குறைவாக உள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கண்ட கிருமி நாசினிகளை கீழ்க்கண்ட அளவுகளில் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.

1. 1% சோடியம் ஹைப்போகுளோரைடு – 5000 லிட்டர்
2. லைசால் – 1500 லிட்டர்
3. பிளிச்சிங்பவுடர் – 6000 கிலோ

மேற்கண்ட கிருமி நாசினிகளை கொரோனா நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதி கூட்டுறவு அக்ரோ நிறுவனங்களிடருந்து தனிஅலுவலர் அவர்களின் 12.01.2021ம் தேதிய முன் அனுமதியின்படி விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட 3 கூட்டுறவு அக்ரோ நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | வினியோகம் செய்ய வேண்டிய கிருமி நாசினி விபரம் | A.3074 The Madurai District Co-op Agro Engineering & Service Society Ltd Koodal Nagar Madurai என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி | A.3078 Thirupparam Kundram Agro Engineering & Service Co-operative Central Ltd. Thirupparam Kundram என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி | MD (SPL) 204 Chellampatti Agro Engineering & Service Co-operative Ltd. Chellampatti.என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி |
|---|---|---|---|---|
| 1. | சோடியம் ஹைப்போகுளோரைடு– 5000 லிட்டர் | ரூ.50 | ரூ.52 | ரூ.53 |
| 2. | லைசால் –1500 லிட்டர் | ரூ.125 | ரூ.130 | ரூ.128 |
| 3. | பிளிச்சிங்பவுடர் 6000 லிட்டர் | ரூ.55 | ரூ.57 | ரூ.58 |

வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு கிருமி நாசினி விநியோகம் செய்ய விலைப்புள்ளி வழங்கிய The Madurai District Co-op Agro Engineering & Service Society Ltd Koodal Nagar என்ற நிறுவனத்திற்கு கொரோனா நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதி தனிஅலுவலர் அவர்களின் 13.01.2021ம் தேதிய முன்அனுமதியின்படி பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. குறைந்த தொகைக்கு கிருமி நாசினி விநியோகம் செய்ய விலைப்புள்ளி வழங்கிய The Madurai District Co-op Agro Engineering & Service Society Ltd Koodal Nagar என்ற நிறுவனத்திற்கு கொரோனா நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதி தனிஅலுவலர் அவர்களின் 13.01.2021ம் தேதிய முன்அனுமதியின்படி பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.1356, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.11

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சமீபத்தில் பெய்து வரும் தொடர் வடகிழக்கு பருவமழைக் காரணமாக அதிக இடங்களில் மழைநீர் குளம்போல் தேங்கியதால், பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆயில் இன்ஞ்சின்கள் மூலம் மழைநீரை அப்புறப்படுத்தும் பணிகளை ஆணையாளர் மற்றும் பொறியாளருடன் ஆய்வு செய்யப்பட்டபோது, ஒரு சில பகுதிகளில் சாலைகள் அதிகமாக சேதமானதால், பொதுமக்கள் அப்பகுதியில் நடந்து செல்வதற்கும் மற்றும் வாகனத்தில் செல்வதற்கும் மிகவும் சிரமப்படுவதாக ஆணையாளரிடம் நேரில் தெரிவித்ததைத் தொடர்ந்து, அப்பகுதிகளில் சாலை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க அறிவுறுத்தியதின் பேரில், கீழ்கண்டுள்ளவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

1) வார்டு எண்.24, காட்டுப்பரமக்குடி முல்லை நகர்ப்பகுதி பேவர் பிளாக் கற்கள் சாலை அமைத்தல். மதிப்பீடு ரூ.10.00 இலட்சம்

2) வார்டு எண்.28, பொன்னையாபுரம் பகுதியில் பேவர் பிளாக் கற்கள் சாலை அமைத்தல், மதிப்பீடு ரூ.10.00 இலட்சம்

மேற்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணியை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1357, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.12

இந்நகராட்சிக்கு எல்கைக்குட்பட்ட 24வது வார்டு முல்லை நகர் பகுதியில் பேவர் பிளாக் கல்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய 09.02.2021ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்ததாரர் | 0.05% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு |
| 2 | திரு.எம்.சங்கர் ஒப்பந்ததாரர் | 0.50%மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு –

1)மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.05% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

2) மேலும், அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1358, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.13

இந்நகராட்சிக்கு எல்கைக்குட்பட்ட 24வது வார்டு பொன்னையாபுரம் பகுதியில் பேவர் பிளாக் கல்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய 09.02.2021ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்ததாரர் | 0.50% மதிப்பீட்டு ரேட்டைவிட அதிகம் |
| 2 | திரு.எம்.சங்கர் ஒப்பந்ததாரர் | 0.05%மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |

<table>
<tr>
<td></td>
<td>அலுவலகக்குறிப்பு –<br>1)மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம்.சங்கர் , ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.05% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>2) மேலும், அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>தீர்மானம் எண்.1359, அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள்.14</td>
<td>இந்நகராட்சி எல்கைக்குள் இயங்கி வரும் நுண்ம உரக்கூட மையங்களில் உள்ள குப்பைகளை அரைக்கும் இயந்திரங்கள் பழுதாவதை ஓராண்டிற்கு பராமரிப்பு சரி செய்யும் பணிக்கு 08.02.2021 அன்று முதன் முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><br>
<table>
<tr><td>1</td><td>எம்/எஸ். ராமு எண்டர்பிரைசஸ் 5/61 கருங்காலக்குடி, மேலூார்</td><td>0.05% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>எம்/எஸ். கதிர் எண்டர்பிரைசஸ் திருப்பத்துார் மெயின் ரோடு, சிங்கம்புணரி</td><td>0.51% மதிப்பீட்டு ரேட்டைவிட அதிகம்</td></tr>
</table>
<br><u>அலுவலகக்குறிப்பு</u> –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் எம்/எஸ். ராமு எண்டர்பிரைசஸ் 5/61 கருங்காலக்குடி, மேலூார் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.05% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>மேலும், திட்டப்பணி அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>தீர்மானம் எண்.1360, அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள்.15</td>
<td>இந்நகராட்சி வருவாய் நிதி (Revenue fund) குடிநீர் (Water Supply Fund) கல்வி நிதி (Education fund) ஆகியவற்றிற்கான 2020–2021ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும் 2021–2022ம் ஆண்டிற்கான எதிர்பார்ப்பு வரவு செலவு மதிப்பீடும் தயார் செய்துள்ளது. மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br><br>தீர்மானம் எண்.1361, அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

தனிஅலுவலர்
பரமக்குடி நகராட்சி

பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள். 25.02.2021

<u>நிகழும் திருவள்ளுவராண்டு பிப்ரவரி மாதம் 25 ம் நாள் ( 25.02.2021) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள அவசர கூட்டப் பொருள்கள்</u>

<table>
<tr><td>பொருள்.1</td><td>
இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள பரமக்குடி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகளில் பழுதுப்பணிகள் ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் செய்யும் பணிக்கு 11.02.2021ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திரு.எம். சங்கர் ஒப்பந்ததாரர்</td><td>0.08% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர்</td><td>0.95% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>
மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.08% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>
மேலும், அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
தீர்மானம் எண்.1362, அனுமதிக்கப்பட்டது.
</td></tr>
<tr><td>பொருள்.2</td><td>
இந்நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மானிய நிதி 2020–2021ன் கீழ் ஏற்கனவே இயங்கி வரும் நுண்ணுயிர் உரக்கிடங்கிற்கு குப்பைகள் அரைக்கும் இயந்திரம் 3 எண்ணமாக வாங்கும் பணிக்கு 15.02.2021 அன்று முதன் முதலாக மின்னணு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் நேரடியாக மட்டும் (Off line) கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>எம்/எஸ். ஸ்ரீ.நித்ரா மெஷின் ஒர்க்ஸ் 7/32 ஜவகர் நகர் அருகில் என்.டி.ரோடு பழனி</td><td>2.50% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு. சந்திரன், ஒப்பந்ததாரர்</td><td>0.17% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>
மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. சந்திரன் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.17% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>
மேலும், திட்டப்பணி அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
தீர்மானம் எண்.1363, அனுமதிக்கப்பட்டது.
</td></tr>
<tr><td>பொருள்.3</td><td>
இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள எமனேஸ்வரம் பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகளில் பழுதுப்பணிகள் ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் செய்யும் பணிக்கு 11.02.2021ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திரு. எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர்</td><td>0.09% மதிப்பீட்டு ரேட்டைவிட</td></tr>
</table>
</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | குறைவு |
| 2 | திரு.எம். சங்கர் ஒப்பந்ததாரா் | 0.85% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்ததாரா் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.09% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும், அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1364, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.4

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள உரப்புளி கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் தெற்கு பக்க சாலையில் சிமிண்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் பணிக்கு 11.02.2021ம் தேதி அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு. எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரா் | 0.05% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| 2 | திரு. எம்.சங்கர், ஒப்பந்ததாரா் | 0.69% மதிப்பீட்டு ரேட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு** –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்ததாரா் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.05% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும், மேற்காணும் பணி திட்டப்பணியின் தொடா்புடைய பணியாக இருப்பதால் அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1365, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.5

